<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்</u>

அசல் வழக்கு எண். 63/2024 நாள்– 21.01.2026

வாதியின் / பிரதிவாதியின் வா.சா.1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.தனபாக்கியம், Gr.III பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்– C.முருகன்(வா.சா.1) தந்தையின் பெயர்–

விலாசம்– தாலுகா–

வயது– தொழில்

நான் இந்த வழக்கின் வாதியாவேன். எனது முதல் விசாரணையை சாட்சியமான எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யாவும் உண்மையானவை. மேலும் அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவைதான். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னுடைய முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1) 10.08.2023 – வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து பிராது தபசில் கண்ட சொத்துக்களை பொறுத்து பிறப்பித்துக் கொண்ட குத்தகை ஆவணம் – அசல் – **வா.சா.ஆ.1**

2) 24.08.2022 – வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து பிராது தபசில் கண்ட 1 முதல் 3 அயிட்டச் சொத்துக்களைப் பொறுத்து பிறப்பித்துக் கொண்ட குத்தகை ஆவணம் – SRO Copy – **வா.சா.ஆ.2**

3) 29.04.2004 – பிரதிவாதிக்கு பிராது 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை பொறுத்து பிரதிவாதியின் தகப்பனார் செந்திவேல் பிறப்பித்து தந்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் – SRO Copy – **வா.சா.ஆ.3**

4) 29.04.2004 – பிரதிவாதிக்கு பிராது 6வது அயிட்டச் சொத்தைப் பொறுத்து பிரதிவாதியின் தாயார் பிச்சையம்மாள் பிறப்பித்து தந்த தான செட்டில்மெண்ட் ஆவணம் – SRO Copy – **வா.சா.ஆ.4**

5) 25.08.2023 – GST பதிவுச்சான்று – பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.5**

6) 15.07.2022 – MSME உதயம் பதிவுச்சான்று – பதிவிறக்க நகல் – **வா.சா.ஆ.6**

7) தொழில் வரி ரசீது – நகல் – **வா.சா.ஆ.7** (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்பட்டது)

8) வீட்டு வரி ரசீது – நகல் – **வா.சா.ஆ.8** (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்பட்டது)

9) மின்சாரக் கட்டண ரசீது – நகல் – **வா.சா.ஆ.9** (பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்பட்டது)

10) 12.04.2021 – பிராது சொத்துகளின் சாகுபடி அடங்கல் – அசல் – **வா.சா.ஆ.10**

**(பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கு.வி ஒத்திவைக்கப்படுகிறது)**